[1970 மார்ச் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 315 வது வினா பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

இரசாயன உரங்கள்

*316 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் ரசாயன கலப்பு உரம் எந்தெந்த கம்பெனிகளில் தயாரிக்கப்படுகிறது, மாவட்டவாரியாக?

(இ) அவைகளுக்குப் போதுமான அளவுக்கு ரசாயன உரம் சப்ளை செய்யப்படுகிறதா? இல்லையென்றால், காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(இ) ஆம். தொகுப்பு ஏற்பாடுகளின் கீழும் (Pool arraingement) கட்டுப்பாடற்ற வணிகப் பங்களவின் கீழும் (free trade quota) போதிய அளவிற்கு இரசாயன உரம் கிடைக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த அரசாங்கம் கலப்பு உரக் கம்பெனிகளில் பல கம்பெனிகளில் உரத்திலே மண், உப்பு போன்றவற்றைக் கலந்து விற்பனை செய்கிறார்கள் என்பது பற்றிப் புகார் வந்திருக்கிறதா? உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சர்க்கார் முடிவெடுத்திருக்கக்கூடிய நேரத்தில் மண்ணையும் உப்பையும் கலக்கக்கூடிய உரத்தைப் போடுவதின் மூலமாக பூமியே கெட்டு நாசமாகிவிடும், இதனாலேயே விவசாயமே கெட்டுவிடும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்கிறார்களா? ஆகவே விஷம் கலந்த உணவைக் கொடுத்தால் அதன்மீது (மணி யடிக்கப்பட்டது)—சார், முடிக்கப் போகிறேன்—என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ அதுபோன்று கடுமையான நடவடிக்கை இதிலேயும் எடுக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கலப்படம் எதிலேயும் எங்கேயும் இருக்கக்கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. அதிலும் குறிப்பாக இரசாயன உரத்திலே கலப்படம் கூடாது. அவ்வப்பொழுது அதிகாரிகள் இவற்றைக் கண்காணித்து வருகிறார்கள். குறிப்பாகப் புகார் வந்தால் அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். இது வரையில் எந்தவிதமான புகாரும் வரவில்லை. தகவல் கொடுத்தால் நான் கவனிக்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், உரம் வாங்குவது சம்பந்தமாக, உரத்தின் விலை ஏற்றப்பட்டு இருக்கிற காரணத்தினாலே நடுவிலே இருக்கிற கமிஷன் ஏஜென்டுகள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியிலே உரத்தின் விலையைப்பற்றி வருகிறது. அதிலே கேளுங்கள்.

196–210-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1970 மார்ச் 11]

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இதுமாதிரிக் கலப்பு உரம் தயாரிக்கிறவர்கள் இரசாயன உரத்தை வாங்கி அதைக் கலப்பு உரம் ஆக்காமல் வெளியிலே விற்றுவிடுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதன்மீது எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கலப்பு உரம் என்பது வேறு. எம்.பி.கே. காம்ப்ளக்ஸ் வருகிறது அது வேறு. கனம் உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் சொன்னது—கல்லையும் மண்ணையும் கலந்து விற்கிறார்களா என்று கேட்டார்கள். கலப்பு உரம் என்பது வேறு. தவறான முறையிலே அதை விற்கிறார்கள் என்றால் அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். அதிகாரிகளும் அவ்வப்பொழுது கண்காணித்து வருகிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : கலப்பு உரக் கம்பெனிகளில் முன்பு இருந்ததைவிட தரம் குறைந்ததாக இருக்கிறது. கலப்புச் சேர்க்கைகள் ஒவ்வொரு பொருளையும் சரியான முறையில் சேர்ப்பது இல்லை என்று தெரிகிறது. கலப்பு உரம் தயாரிப்பதை அரசாங்கத்தின் மூலம் எப்படிக் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு பிளாக்கிலும் உர அதிகாரிகள் இருந்துகொண்டு இவற்றைக் கண்காணித்து வருகிறார்கள். இதைப்பற்றிப் புகார் வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் திரும்பத் திரும்பக் கூறுகிறேன்.

திரு. அ. ஆறுமுகம் : கலப்பு உரத்தைத் தயாரிக்கிறவர்கள் பல மாதிரியான உரங்களைத் தயாரிக்கிறார்கள். அரசாங்கத்தின் அனுமதி பெற்ற பிறகு, அதிகாரிகள் பார்த்ததற்குப் பிறகு அவற்றை வெளியிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நிச்சயமாக எடுக்கும்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இரசாயன உரம் 50 கிலோவுக்குப் பதில் 25 கிலோவாகக் குறைகிறது. அது மூட்டையிலே கட்டி வைக்கப்பட்டு நல்ல முறையிலே பயன்படுத்தப்படாமல் உள்ளது. ஒரு பயிருக்குப் பயன்படுத்துவதை வேறு பயிருக்குப் பயன்படுத்துகிறார்கள். இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இரண்டு வகையான இரசாயன உரங்கள் இருக்கின்றன. கேள்வியில் கேட்கப்பட்டிருப்பது கலப்பு உரத்தைப்பற்றியது. அந்த அந்தக் கம்பெனிகள் விற்கின்றன. இவற்றைப் பொட்டமாக அல்லது

மூட்டையாகக் கட்ட வழியில்லை. விவசாயிகள் தேவையான அளவுக்குக் கம்பெனிகளிலே போய்வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. மூட்டைகளிலே குறைபாடுகள் வருவது எல்லாம் மத்திய அரசாங்கத்திலேயிருந்து வருகின்றதைப் பொறுத்துத்தான். அதிலேதான் புகார்கள் வருகின்றன. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மாநிலத்திலே உள்ள கம்பெனிகள் விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற அளவுக்குக் கொடுக்கக்கூடிய முறையில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி 317.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்விக்குப் போய் ஆகிவிட்டது.

*317 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரசாயன உர விலைச் சலுகையை நவம்பர் 30-க்கு பிறகு நீடிக்கச் செய்யும் உத்தேசம் தமிழக அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மெதுவாக விற்பனையாகக்கூடிய உர வகைகளான கால்சியம் அம்மோனியம் நைட்ரேட், டை—அம்மோனியம் பாஸ்பேட், அம்மோனியம் பாஸ்பேட், அம்மோனியம் குளோரைடு, பொட்டாஷ் மியூரியட், வெவ்வேறு தரங்களைச் சேர்ந்த எம்.பி.கே. காம்பிளக்ஸ் ஆகிய வகைப் பொறுத்தவரையில் 30—11—69 முதல் 31—3—70 வரை இரசாயன உரங்களில் பழைய இருப்புகளைச் சலுகை விலைகளில் விற்க அரசு அனுமதியளித்துள்ளது. எனினும். விரைவாக விற்பனையாகும் அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் சல்பேட் நைட்ரேட், யூரியா போன்ற இரசாயன உரங்கள் குறித்து 1—3—69 முதல் செயலுக்குக் கொண்டுவரப்படும் என்று இந்திய அரசினால் அறிவிக்கப்பட்ட அதிகரித்த தொகுப்பு விலைகள், 1—12—69 அன்று முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டன.

திரு. வை. சுவாமிநாதன் : யூரியா, சல்பேட் போன்ற உரங்கள் பழைய ஸ்டாக்காக இருக்கும் காரணத்தால் அவற்றைப் பழைய விலைக்கே விற்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த உரங்களை எல்லாம் பழைய விலைக்கே தான் 10 சதவிகிதம் குறைந்த விலைக்கேதான் கொடுத்துக் கொண்டு வருகிறோம். 1–12–1969லேயே அதிகப்படியான விலைக்கு மாநில அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று கூறிற்று. நாங்கள் மத்திய அமைச்சரிடத்தில் இவற்றைப் பழைய விலைக்கேதான் கொடுக்க வேண்டுமென்று கூறி அவ்வாறு குறைந்த விலைக்குத்தான் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.